தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்


ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 25
இதழ் 05
செப்டம்பர் 2023




இந்தியாவிலேயே முதல்முறையாக

## முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

மாநிலம் முழுவதும் விரிவாக்கம்



**31 ஆயிரம்**
அரசுப் பள்ளிகள்

**17 இலட்சம்**
மாணவ, மாணவியர்கள் பயன்

## கற்றல் திறன் மேம்பட காலை உணவு



தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்கள் மூலமாகவும் ஏராளமான வளர்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் நகர்ப்புரங்களிலும், கிராமப்புறங்களிலும் செயல்படும் சுய உதவிக்குழுவினர் பொருளாதார வளர்ச்சி பெற்றுவருகின்றனர்.

முனைவர். **ப. செந்தில்குமார்,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

## அன்புள்ள சுய உதவிக்குழு சகோதரிகளே,

மகளிர் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் கிராமங்கள் மற்றும் நகர்ப்புரங்களில் செயல்படும் சுய உதவிக்குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச்சங்கங்கள் மற்றும் ஊராட்சி மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளில் உறுப்பினராக உள்ள நீங்கள், அனைத்துத் துறைகளிலும் உங்களின் ஆளுமையையும், திறமையையும் வெளிப்படுத்தி சிறந்த தொழில் முனைவோர்களாகத் திகழ்ந்து வருகிறீர்கள். இது சுய உதவிக்குழு இயக்கத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

அதுமட்டுமல்லாது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்கள் மூலமாகவும் ஏராளமான வளர்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் நகர்ப்புரங்களிலும், கிராமப்புறங்களிலும் செயல்படும் சுய உதவிக்குழுவினர் பொருளாதார வளர்ச்சி பெற்றுவருகின்றனர். மேலும் தீனதயாள் உபாத்யாய ஊரகத்திறன் பயிற்சித் திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு, வேலைவாய்ப்புகள் பெற்றுத்தரப்படுவதுடன், சுய தொழில் மேற்கொள்ளவும் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் சிறப்பாக செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் உங்களின் செயல்பாடுகளுக்கு என்றும் துணைநிற்கும். மகளிர் சுய உதவிக்குழு இயக்கத்தின் வெற்றிக்கு உங்களின் உழைப்புதான் முக்கிய காரணம் என்பதை அறிந்து நீங்கள் உங்களின் உழைப்பையும், ஊக்கத்தையும் கைவிடாது உற்சாகத்துடன் செயல்பட்டு நமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்ட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

(ப. செந்தில்குமார்)



திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்.

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை மாநிலத்தின் கடைக்கோடி கிராமத்தில் வசிக்கும் மகளிரிடமும் கொண்டு சேர்க்கும் உன்னதப் பணியினை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்க அலகுகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி சிறப்புற மேற்கொண்டு வருகின்றன என்பது நீங்கள் அறிந்ததுதான்.

ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்கள் மூலம் அமைக்கப்பட்டுள்ள சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு ஆதார நிதி, சமுதாய முதலீட்டு நிதி, நலிவுற்றோர் மேம்பாட்டு நிதி போன்றவை வழங்கப்படுகின்றன என்பதும், சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரத்தை உயர்த்திட அவர்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குவதில் நாம் சாதனைகளை படைத்துள்ளோம் என்பதையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

சமீபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் தரும் வகையில், 30,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து ஜூலை 2023 வரை 2,01,257 சுய உதவிக் குழுக்களுக்கு 11,468.59 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதும், கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட அதிக அளவு கடன் இணைப்பு வழங்கி சாதனை படைப்போம் என்பதையும் மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அறிவித்த திட்டங்களை நடைமுறைப்படுத்த நமது நிறுவனம் முழுமூச்சுடன் செயலாற்றி வருகிறது. இத்திட்டங்கள் மட்டுமின்றி பெண்களுக்கு நன்மை தரும் நமது நிறுவனத்தின் திட்டங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக செயல்படுத்துவதில் நாம் என்றும் முன்னிற்கிறோம் என்பதையும், இத்தகைய திட்டங்கள் அனைத்தும் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிப் பயணத்திற்கு மேலும் ஒரு மைல் கல்லாக அமையும் என்பதையும் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க மடையா னுழை"

என்ற குறள் வரிகளுக்கேற்ப உங்களின் அயராத உழைப்பால் மேலும் பல வெற்றிகள் உங்களைத் தேடிவரும் என்பது திண்ணம். உங்களின் முயற்சிகளுக்கு என்றும் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் துணை நிற்கும்.

நன்றி. வணக்கம்.

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(ச. திவ்யதர்சினி)



திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

## அன்புள்ள சுய உதவிக்குழு சகோதரிகளே,

மகளிர் மேம்பாட்டிற்காக துவக்கப்பட்ட நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மற்றும் தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன்பயிற்சித் திட்டம் ஆகிய அமைப்புகள் பெண்களின் ஆற்றல் மேம்பாட்டை அதிகரிக்க, சுய உதவிக்குழு இயக்கத்தை முன்னெடுத்து செல்வதில் தங்களை அர்ப்பணித்து கொண்டுள்ளன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேல் அளப்பரிய அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்கள் பொருளாதார சுய சார்பு பெற்று தன்னம்பிக்கையுடன் வாழ்வதற்காகவும், பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதுடன், சுய உதவிக்குழுவினருக்கு வங்கிக்கடன்களையும், நலத்திட்ட உதவிகளையும் நேரில் வழங்கி வருகிறார். இது சுய உதவிக் குழுவினருக்கு மேலும் உத்வேகத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தி வருகிறது.

குறிப்பாக தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நகர்ப்புரங்களில் வசிக்கும் ஏழைஎளிய மக்கள், தனிநபர்கள், சுய உதவிக்குழுக்கள், சாலையோர வியாபாரிகள், ஒத்ததொழில் குழுக்கள் போன்றவற்றிற்கு கடனுதவிகள் வழங்குதல், திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், நகர்ப்புர வாழ்வாதார மையங்களை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் நகர்ப்புர ஏழை மக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்து வருவதும் பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

சமீபத்தில் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நமது இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில்கூட மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, நகர்ப்புர சுய உதவிக்குழுக்களுக்கு 100 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக்கடன் இணைப்புகள், திறன் பயிற்சி பெற்றவர்களுக்கு பணி ஆணைகள், ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் வங்கியாளர்களுக்கு விருதுகள், பயிற்சி நிறுவனங்களுக்கு சான்றிதழ்கள் ஆகியவற்றை வழங்கி சிறப்பித்து, நம் பணியினை ஊக்குவித்ததை நீங்கள் அறிவீர்கள்.

சுயஉதவிக்குழுக்களைச் சார்ந்த மகளிர் தங்கள் வாழ்வில் எவ்வளவு இடர் வந்தாலும் அதை சாதனைகளாக்கி, வெற்றிமகுடம் சூட்டி, நமது மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு பெருமைகளைப் பெற்றுத்தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

(பா. பிரியங்கா பங்கஜம்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனு மிலர்**
–(குறள்–430)

அறிவு இல்லாதவர்களுக்கு வேறு எது இருந்தாலும் பெருமையில்லை; அறிவு உள்ளவர்களுக்கு வேறு எது இல்லாவிட்டாலும் சிறுமை இல்லை.

# உள்ளே...


| | |
|---|---|
| சுதந்திர தின விழா – 2023 | 08 |
| ஆய்வில் முதலமைச்சர் | 11 |
| பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல் | 14 |
| நானிலம் போற்றும் நல்லதொரு திட்டம் | 18 |
| மதி சிறகுகள் தொழில்மையம் | 21 |
| நமது திட்டங்களைத் தெரிந்து கொள்வோம் | 22 |
| தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் | 33 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
விலை ரூ. 20/- • மலர் 25 • இதழ் 05 • செப்டம்பர் 2023

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பா.ஜெயசுதா,** பொது மேலாளர் (பொ),

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்
ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

# ஆசிரியர்கள் சமூக சீர்திருத்தவாதிகளே...



பல இலட்சம் மைல்களுக்கு அப்பால் செவ்வாய், சந்திரன் போன்ற கிரகங்களுக்கு மனிதர்களையும், இயந்திரங்களையும் அனுப்பி ஆய்வு செய்யும் அளவிற்கு அறிவியல் அறிவை வளர்ப்பதற்கு காரணமாக இருப்பவர்கள் ஆசிரியர்களே. கற்பனைக்கு எட்டாத அளவிற்கு அழகிய கட்டமைப்பை உருவாக்கும் திறமைமிக்க பொறியாளர்கள் உருவாக காரணமாய் இருப்பவர்களும் ஆசிரியர்களே. இதற்கு உதாரணம் இந்த தலையங்கம் எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் சந்திராயன் III விண்கலம்வெற்றிகரமாகநிலவில்இறக்கிஆராய்ச்சிமேற்கொண்டிருப்பது நமது நாட்டிற்கே பெருமை. அறிவியல் ஆராய்ச்சியாளர்களுக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வோம்.

உணவு உற்பத்தி, மருத்துவம், தொழில் வளர்ச்சி போன்ற துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, மனித குலத்திற்கான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவதற்கு காரணமானவர்களும் ஆசிரியர்களே.

அனைத்திற்கும் மூலகாரணமான எழுத்தறிவு, எண்ணறிவு எனும் கண்களைத் திறந்து ஆரம்ப கல்வி, உயர்நிலைக் கல்வி, பல்கலைக்கழக உயர்கல்வி, தொழில்நுட்பக் கல்வி என பல்வேறு நிலைகளில் மேலும் மேலும் அறிவிற்கு செறிவூட்டும் பணியில் ஈடுபடுவதோடு மனித மாண்பினை உயர்த்தக் கூடிய நல்லொழுக்கமும், பண்பாடு, நாகரிகம் மிகுந்த கலாச்சாரம், நாட்டுப்பற்று, சமூகப் பொறுப்பு, தலைமைப் பண்புகள், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை ஒருங்கே கற்பித்து சமுதாய சிற்பிகளாக உருவாக்குவதற்கு காரணமானவர்களும் ஆசிரியர்களே.

மனித உயிர்களைக் காக்கும் மருத்துவர்களை உருவாக்குவதும், அரசியல் சட்டத்தை தெளிவுபடுத்தி நீதியை நிலைநாட்ட சட்ட வல்லுநர்களை உருவாக்குவதற்கு காரணமானவர்களும் ஆசிரியர்களே.

ஆசிரியர்கள் செய்வது தொழிலும் அல்ல, அரசு பணியும் அல்ல. மாறாக அவர்கள் செய்வது சமூக சீர்திருத்தப் பணி ஆகும். இது ஒரு புனிதமான பணி. மனித குலத்தை சிறப்பாக வழிநடத்துவதற்காக வழிகாட்டும் பணி. இப்படிப்பட்ட பணியை செய்யும் ஆசிரியர்களுக்கு நாம் யாவரும் நன்றி கடன் செலுத்த கடமைப்பட்டுள்ளோம். ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் தின விழா கொண்டாடுவதன் மூலமும், நல்லாசிரியர் விருது வழங்குவதன் மூலமும், போதிய ஊதியம் வழங்கப்பட்டிருப்பதன் மூலமும் ஆசிரியர்களின் செம்மையான பணிகளை அரசு ஊக்குவித்து வருவது பாராட்டிற்குரியது.

நாம் கற்றுக் கொண்ட கல்வி திறமைகள் சமுதாயத்திற்கு பயன்பட வேண்டும். அவ்வாறு சமுதாயத்திற்கு பயன்படவில்லை எனில் அது கல்வியே அல்ல. குடும்பம் தனது குழந்தைகளை பாதுகாத்து, பராமரித்து வளர்த்தெடுக்கின்றது. ஆனால் கல்வி கூடங்களில் ஆசிரியர்கள், அந்த குழந்தைகளின் அறிவை கூர்மைப்படுத்தி சமுதாயத்தில் அந்தஸ்து மிக்கவர்களாக உயர்த்துகின்றார்கள். நாம் பெற்றுக் கொண்ட கல்வியினை, ஒவ்வொருவரும் ஆசிரியர்களாக இருந்து மற்றவர்களுக்கு கல்வி அறிவை கொடுப்போம். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற நோக்கோடு ஆசிரியர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்






# மாநில அளவிலான மூன்றாவது மாவட்ட அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (DISHA) கூட்டம்


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 16.08.2023 அன்று தலைமைச் செயலகத்தில், மாநில அளவிலான மூன்றாவது மாவட்ட அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (DISHA) கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., அரசு துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.









# சுதந்திர தின விழா - 2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி 15.08.2023 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி, சுதந்திரத் திருநாள் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வைத் தொடர்ந்து, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுடன், டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல்கலாம் விருது, கல்பனா சாவ்லா விருது, முதலமைச்சரின் நல்ஆளுமை விருதுகள், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மிகச் சிறந்த சேவை புரிந்தோருக்கான விருதுகள், மகளிர் நலத்திற்கான சிறந்த சேவைக்காக தொண்டாற்றியவர்களுக்கான விருது, சிறந்தஉள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருதுகள், முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள், காவல் பதக்கங்கள் ஆகிய தமிழ்நாடு அரசின் விருதுகளையும், பதக்கங்களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றவர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் உள்ளார்.










# மீனவ பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.08.2023 அன்று இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் மீனவ சங்கங்கள் இணைந்து நடத்தும், மீனவர் நல மாநாடு மற்றும் 14,000 மீனவப் பயனாளிகளுக்கு ரூ.88.90 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மானிய விலையில் கடல் பாசி வளர்ப்பு மிதவை வாங்குவதற்கான நிதியுதவியை பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள 13 கடலோர மாவட்டங்களில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் மீன் விற்பனை செய்யும் மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுவின் 138 பயனாளிகளுக்கு ரூ.4950 இலட்சம், நிறுவன கூட்டுப் பொறுப்புக் குழு மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவின் 407 உறுப்பினர்களுக்கு ரூ.3110.75 இலட்சம் மற்றும் துயர் குறைப்பு நிதிக் கடனாக 270 பயனாளிகளுக்கு ரூ.7700 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., மீன்வளத்துறை ஆணையர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# முன்மாதிரி கிராம விருதிற்கு தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிகளுக்கு பரிசு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.08.2023 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 2021-22 மற்றும் 2022-23ஆம் ஆண்டுகளுக்கான மாநில அளவிலான சிறந்த சுகாதார செயல்பாடுகளுக்கான முன்மாதிரி கிராம விருதிற்கு தேர்வு செய்யப்பட்ட குளூர், நி.பஞ்சம்பட்டி, நட்டாத்தி, நாயக்கன்பாளையம், மேல்மருவத்தூர் மற்றும் அரியனேந்தல் ஆகிய ஆறு கிராம ஊராட்சிகளை சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு பரிசுத் தொகையாக தலா 15 இலட்சம் ரூபாயும், கேடயமும் வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி, தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு. பா.பொன்னையா, இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர் திரு. எம்.எஸ்.பிரசாந்த், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 25.08.2023 அன்று இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தி, 31,008 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 17 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் தொடங்கி வைக்கும் விதமாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊரான நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து, உரையாற்றினார்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு உணவு பரிமாறி, அவர்களுடன் கலந்துரையாடி உணவருந்தினார்.

இந்த நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம். செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. நாகை மாலி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு. உ.மதிவாணன். தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. என். கௌதமன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., சமூக நலத்துறை கூடுதல் இயக்குநர் திருமதி எஸ்.பி. கார்த்திகா, இ.ஆ.ப., நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.








# “ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 26.08.2023 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், “ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. எஸ். இரகுபதி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ.மெய்யநாதன், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, அரசு துறைச் செயலாளர்கள், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப., திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சாருஸ்ரீ, இ.ஆ. ப., தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தீபக் ஜேக்கப், இ.ஆ.ப., மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.பி. மகாபாரதி, இ.ஆ.ப மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நகர்ப்புர சுய உதவிக் குழுக்கள், நகர்ப்புர சாலையோர வியாபாரிகள், திறன் பயிற்சி பெற்ற இளைஞர்கள், சிறு தொழில் முனைவோர்கள், வங்கியாளர்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு நலத்திட்ட உதவிகள், விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கும் விழா





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், மகளிரின் முன்னேற்றத்திற்காக, 1989 ஆம் ஆண்டு முதன்முறையாக தருமபுரி மாவட்டத்தில் துவங்கப்பட்ட மகளிர் திட்டம் இன்று தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது சமூக, பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு இத்திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்கி, முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில்களைத் தொடங்க வங்கிக் கடன் இணைப்புகள் ஏற்படுத்தி சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்தி வருகிறது.

மகளிரின் முன்னேற்றத்திற்கான அரசு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அங்கமான தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் நகர்ப்புர குடும்பங்களின் வறுமையைப் போக்கவும், சமூக அமைப்புகள் அமைத்து, திறன் வளர்ப்பு பயிற்சி மூலமாகவும் மற்றும் வங்கி கடன் இணைப்பு மூலமாகவும் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படும் இயக்கம் ஆகும்.

2014 - ஆம் ஆண்டு முதல் இந்த இயக்கமானது மாநிலம் முழுவதும் உள்ள 649 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது, இந்த இயக்கம் மூலம் 14.5 இலட்சம் ஏழை குடும்பங்களை உள்ளடக்கிய 1.30 இலட்சம் நகர்ப்புர சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 14.08.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சுய உதவிக் குழு மகளிரின் வெற்றிக் கதைகள் அடங்கிய புத்தகத்தை வெளியிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படும் 1808 நகர்ப்புர சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 23,424 மகளிர் சகோதரிகள் பயன் பெறும் வகையில் 100 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள், உணவுத் தர பயிற்சி பெற்று சான்றிதழ்






பெறவுள்ள 182 நகர்ப்புர சாலையோர வியாபாரிகளில் 50 நபர்களுக்கு உணவு தரச் சான்றிதழ், திறன் பயிற்சி பெற்ற 100 இளைஞர்களுக்கு ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் பணி நியமன ஆணைகள், சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த சிறு தொழில் முனைவோர்களுக்கு கடனுதவிகள், நகர்ப்புர சுய உதவிக் குழுக்களுக்கு சிறப்பான முறையில் வங்கிக் கடன்கள் வழங்கிய ஆறு வங்கிகளுக்கு வங்கியாளர் விருதுகள் மற்றும் 9 தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு சான்றிதழ்கள் ஆகியவற்றை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா அவர்கள், திரு. வி. க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி அவர்கள், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். நா. எழிலன் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், வங்கியாளர்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள், சுய உதவிக் குழு மகளிர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.






# பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரக ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கத்தில் 31.08.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பல்வேறு துறைகள் சார்பாக 912 பயனாளிகளுக்கு ரூ.35.83 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு நலத் திட்ட உதவிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு செயலாளர்கள், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களின் கள ஆய்வு

மயிலாடுதுறை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் 25.08.2023 அன்று நேரில் பார்வையிட்டு கள ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, தரங்கம்பாடி பேரூராட்சியின் பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள் மற்றும் உலர்மீன் (கருவாடு) உற்பத்தி பொருட்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த மேலாண்மை இயக்குநர் அவர்கள், பகுதி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்கள். இந்நிகழ்வின்போது, மயிலாடுதுறை மாவட்ட ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் அவர்களும் மற்றும் அரசு அலுவலர்களும் உடனிருந்தனர்.



## கல்லூரி சந்தை தொடக்க விழா

திண்டுக்கல் எம்.வி.எம். அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களின் விற்பனைக் கண்காட்சி கல்லூரி சந்தையை திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மொ.நா.பூங்கொடி, இ.ஆ.ப., அவர்கள் 09.08.2023 அன்று தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. நா.சரவணன், எம்.வி.எம். அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் தே.இலட்சுமி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து




15.08.2023 அன்று சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு ஆகியோர் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தில் கலந்து கொண்டார்கள். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர்கள் திரு. அ.சங்கர், இ.ஆ.ப., திருமதி. ந.திருமகள், பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழுத் தலைவர் திரு. என்.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் திரு. எஸ்.மதன்மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் சுதந்திர தினவிழா கொண்டாட்டம்

சுதந்திரத் திருநாளை முன்னிட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில், சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.








# ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து மாநில அளவிலான ஆலோசனை குழு கூட்டம்

ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின செயல்பாடுகள் குறித்து மாநில அளவிலான ஆலோசனை குழு கூட்டம் 27.07.2023 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன அலுவலக கூட்ட அரங்கத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் செயல்படும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக அதிக வேலைவாய்ப்புள்ள பயிற்சிகளுக்கு முன்னுரிமை அளிப்பது, பயிற்சியின் தரத்தை உயர்த்துவது, பயிற்சி முடித்த இளைஞர்களுக்கு சுய தொழில் மேற்கொள்வதற்காக வங்கி கடன் வழங்குவதை விரைவுபடுத்துவது ஆகியன குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் தரத்துடன் செயல்பட ஏதுவாக நில ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டங்களில் பயிற்சி நிறுவனங்களின் கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் எனவும், நில ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ள மாவட்டங்களில் நில ஒதுக்கீட்டை விரைந்து முடிக்குமாறும் வங்கியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழ்நாட்டு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திருமதி ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., செயல் இயக்குர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப மற்றும் DDU-GKY முதன்மை இயக்கு அலுவலர் திரு. ஆர். சங்கர், மாநில திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன், தேசிய இயக்குனர் திரு, முருகேசன் ஆர். ஆர் சிங், வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், வங்கி அலுவலர்கள், ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் இயக்குனர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.







# 'மதி சிறகுகள் மகளிர் புத்தொழில் இயக்கம் (TN-Women)' என்ற பெயரில் ஒரு இணை முனைவாக்க மையத்தை நிறுவுவதற்கு WE HUB ஃபவுண்டேஷன் என்ற தெலுங்கானா அரசு நிறுவனத்துடன் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP-TNRTP), தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் நடத்தும் தொழில் நிறுவனங்களுக்கு வேண்டிய அனைத்து நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுகளை அளித்து மேம்படுத்தி வருகிறது. தற்பொழுது இத்திட்டத்தில் ஒரு படி கூடுதலாக "மதி சிறகுகள் மகளிர் புத்தொழில் இயக்கம் (TN-Women) " என்ற பெயரில் ஒரு இணை முனைவாக்க மையத்தை நிறுவுவதற்கு WE HUB ∴பவுண்டேஷன் என்ற தெலுங்கானா அரசு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதன் மூலம் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தால் பயனடையும் அனைத்து தொழில் முனைவோர்களும் புதுமையான வழியில் வணிகத்தை மேற்கொள்ளவும், நவீன தொழில்நுட்பங்களை தொழில் வளர்ச்சிக்காகப் பெற்றிடவும் இணை ஆதரவு வழங்கப்படும்.

இதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட நிகழ்ச்சியில், திரு. ஜெயேஷ் ரஞ்சன், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர், தொழில் மற்றும் வர்த்தகத் துறை ஐடி-எலக்ட்ரானிக் மற்றும் கம்யூனிகேஷன் டெக்னாலஜி, தெலுங்கானா அரசு மற்றும் முனைவர் ப. செந்தில் குமார், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு அரசு ஆகியோர் முன்னிலையில் திருமதி ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., தலைமைச் செயல் அலுவலர், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் திருமதி. தீப்தி ரவுலா, தலைமைச் செயல் அலுவலர், WE HUB ஆகியோர் கையெழுத்திட்டு பரிமாறிக் கொண்டனர்.

புத்தொழில் இயக்கம், பெண்களை புது சக்தியுடன் இயக்கும்!
தமிழ்நாட்டு மகளிர் சுய உதவிக் குழுக்களை மேம்படுத்த
வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் ஓர் முன்னோடி முயற்சி
"மதி சிறகுகள் மகளிர் புத்தொழில் இயக்கம் (TN-Women)"



# நானிலம் போற்றும் நல்லதொரு திட்டம்

**இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள 31,008 பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் 17 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்**

### முதலமைச்சரின் காலை உணத் திட்டம்



"நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்கு செல்லக் கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்கு கிடைத்திருக்கிறது. பள்ளிகள் தூரமாக இருப்பது மட்டுமல்ல, சிலருடைய குடும்ப சூழலும் இதற்கு காரணமாக இருக்கிறது. இதனை மனதில் கொண்டு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை நாம் தீட்டி இருக்கிறோம். முதற்கட்டமாக சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படும். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக் கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும்" என்று ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெற்றதையொட்டி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 7.5.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

அதைத் தொடர்ந்து, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கு காலை உணவினை பரிமாறி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.09.2022 அன்று தொடங்கி வைத்து, மாணவர்களுடன் உணவருந்தினார்.

முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில், இத்திட்டத்தினை செயல்படுத்திட ரூ.33.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு. 417 மாநகராட்சி பள்ளிகள், 163 நகராட்சி பள்ளிகள், 728 வட்டாரம் மற்றும் கிராம ஊராட்சி பள்ளிகள், 237 தொலைதூர, மலைபிரதேச பள்ளிகள் என மொத்தம் 1,545 பள்ளிகளில் தொடங்கப்பட்டு, 1,14,095 மாணவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பயன் பெற்று வருகின்றனர். மேலும், 28.02.2023 முதல் இத்திட்டம் மேலும் நீட்டிக்கப்பட்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட செயலியின்படி 1,005 நகர்ப்புர மையங்களில் 1,12,883 குழந்தைகளும், 963 கிராமப்புற மையங்களில் 41,225 குழந்தைகளும் பயனடைந்து வருகின்றனர்.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் குறிக்கோள்கள்

மாணவியர்கள் பசியின்றி பள்ளிக்கு வருதல், ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமலிருத்தல், ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையை குறைத்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### திட்டம் செயல்படுத்தும் முறை

பெருநகர சென்னை மாநகராட்சி, மற்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஒருங்கிணைந்த சமையற்கூடங்கள் மூலம் பள்ளி சத்துணவு மையங்களை இணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராம ஊராட்சி மற்றும் மலைப்








பகுதி மையங்களில் இத்திட்டம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி / சுய உதவிக் குழு மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பெரும்பாலான பொதுமக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் மிகவும் பாராட்டப்பட்டு. மகிழ்ச்சியோடு வரவேற்கப்பட்டு வருகிறது. இந்த முயற்சியின் பயனாக, பள்ளிகளில் மாணவர்களின் வருகை எண்ணிக்கை முன்பு இருந்ததைவிட அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு, இந்தத் திட்டத்தினை 2023-2024 ஆம் ஆண்டு, படிப்படியாக மாநிலத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கும் விரிவாக்கம் செய்திட அரசு முடிவு செய்துள்ளது என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.1.2023 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக. 2023-24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், 'பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றி கல்வியறிவு பெற்றிடவும் எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்' என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தை செயல்படுத்திட வரும் கல்வி ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை பயிலும் மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இந்த நல்ல நோக்கத்திற்கு வரும் நிதியாண்டில் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், ரூ.404.41 கோடி செலவில் 31,008 பள்ளிகளில் பயிலும் 17 இலட்சம் மாணவர்கள் பயன் பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தி தொடங்கி வைக்கும் விதமாக திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், 25.08.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உணவு பரிமாறி, அவர்களுடன் கலந்துரையாடி உணவருந்தினார். இந்நிகழ்வினைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை துவக்கி வைத்து, மாணவ-மாணவியருடன் உணவருந்தினர்.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் வழங்கப்படும் உணவு

திங்கட்கிழமை காய்கறி சாம்பாருடன் கூடிய ரவா உப்புமா / சேமியா உப்புமா / அரிசி உப்புமா / கோதுமை ரவை உப்புமா; செவ்வாய்க்கிழமை - காய்கறி சாம்பாருடன் கூடிய ரவா காய்கறி கிச்சடி / சேமியா காய்கறி கிச்சடி / சோள காய்கறி கிச்சடி / கோதுமை ரவை கிச்சடி; புதன்கிழமை - காய்கறி சாம்பாருடன் கூடிய ரவா பொங்கல் / வெண் பொங்கல்; வியாழக்கிழமை காய்கறி சாம்பாருடன் கூடிய சேமியா உப்புமா / அரிசி உப்புமா / ரவா உப்புமா / கோதுமை ரவை உப்புமா; வெள்ளிக்கிழமை - காய்கறி சாம்பாருடன் கூடிய சேமியா காய்கறி கிச்சடி / சோள காய்கறி கிச்சடி / ரவா காய்கறி கிச்சடி / கோதுமை ரவை கிச்சடி ஆகியவை மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

ஒரு மாணவ, மாணவிக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் காலை உணவுக்கான மூலப் பொருட்களின் அளவு 50 கிராம் அரிசி / ரவை / கோதுமை ரவை / சேமியா. மேலும், அந்தந்த இடங்களில் விளையும் சிறுதானியங்கள் / சாம்பாருக்கான பருப்பு 15 கிராம் மற்றும் உள்ளூரில் கிடைக்கக் கூடிய காய்கறிகள், ஒரு வாரத்தில் குறைந்தது 2 நாட்களாவது உள்ளூரில் கிடைக்கக் கூடிய சிறுதானியங்களால் தயாரிக்கப்பட்ட காலை உணவு வழங்கப்படும்.



## தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக TCS iON நிறுவனத்தின் சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணாக்கர்களுக்கு தகவல் தொழில் நுட்பம், Animation போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக (தாட்கோ) நிறுவனமானது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகளை வழங்கி வருகிறது. அதன் அடிப்படையில் பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் ஏதேனும் ஒரு பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு முடித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் மாணாக்கர்களுக்கு TCS iON நிறுவனத்துடன் இணைந்து, தகவல் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட பயிற்சிகளான Data Analytics and Reporting, Applied Cloud Computing, Practical Approach to cyber security, Machine Learning for Real world Application, Intelligent Game Design and its Applications மேலும் Animation சம்பந்தப்பட்ட பயிற்சிகளான Graphic Designing (Professional), Motion Graphics போன்ற பயிற்சிகளை இணையதளம் வழியாக பயிற்றுவித்து முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற வழிவகை செய்யப்படவுள்ளது.

தகவல் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட பயிற்சியினை பெற B.E/B.Tech.,/BCA/B.Sc.,(CS)/B.Sc.,(CS&IT) MCA/M.Sc.,(CS)/M.Sc.,(CS&IT) அல்லது ஏதேனும் ஒரு பட்டப் படிப்பு முடித்த மாணாக்கர்கள் அல்லது கல்லூரிகளில் இறுதியாண்டு படித்து வரும் 18 முதல் 28 வயது நிரம்பிய மாணாக்கர்கள் விண்ணப்பிக்கலாம்.

அனிமேஷன் (Animation) சம்பந்தப்பட்ட பயிற்சியினை பெற பன்னிரெண்டாம் வகுப்பு அல்லது ITI தேர்ச்சி பெற்ற 18 முதல் 28 வயது நிரம்பிய மாணாக்கர்கள் விண்ணப்பிக்கலாம்.

மேலும் TCS iON நிறுவனத்தால் நடத்தப்படும் தகுதித் தேர்வில் NQT (National Qualifier Test) தேர்ச்சி பெற வேண்டும். இத்தேர்வு முறையானது ஆங்கில வழியில் TCS iON நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேர்வு மையங்களான சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய தேர்வு மையங்களில் நடைபெறும். இத்தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறும் பட்சத்தில் TCS iON நிறுவனத்தால் வழங்கப்படும் தகவல் தொழில் நுட்பம் மற்றும் அனிமேஷன் சம்பந்தப்பட்ட பயிற்சியில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் சேர்ந்து பயிற்சி பெறலாம்.

இப்பயிற்சியினை பெற www.tahdco.com என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம். இப்பயிற்சிக்கான கட்டணத்தை தாட்கோ வழங்கும் என தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு. க.சு.கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.





# மதி சிறகுகள் தொழில்மையம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் செயல்படும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP-TNRTP) வறுமை ஒழிப்பை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரும் அமைப்பாகும். இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் மதி சிறகுகள் தொழில் மையம் குறித்து தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

### மதி சிறகுகள் தொழில் மையம் என்பது என்ன ?

மதி சிறகுகள் தொழில் மையம் என்பது வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களில், பெண்கள் நடத்திவரும் ஊரகத் தொழில் நிறுவனங்களுக்கு (ஏற்கனவே இயங்கி வரும் நிறுவனங்கள் மற்றும் புதிதாக தொடங்கவிருக்கும் தொழில் நிறுவனங்கள்) தொழில் மற்றும் வணிகம் சார்ந்த அனைத்து தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கும் மையமாகும். இம்மையங்கள் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்படும் ஒவ்வொரு வட்டாரத்தின் மையப்பகுதியிலும் அமைந்து சேவைகளை வழங்கி வருகின்றன. ஒரு மதி சிறகுகள் தொழில் மையம், ஒரு வட்டாரத்தில் குறைந்தபட்சம் 150 தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளித்து வழிகாட்ட முடியும். எனவே, வளரும் தொழில் முனைவோர் தங்களுக்கு வேண்டிய தொழில்/வணிகம் சார்ந்த அனைத்து உதவிகளையும் இம்மையத்தில் நட்பாதரவுடன் கேட்டுப் பெறலாம்.

### மதி சிறகுகள் தொழில் மையத்தால் யாரல்லாம் பயனடைகின்றனர் ?

1. மகளிர் நடத்தும் தொழில் நிறுவனங்கள் (மகளிர் தனிநபர் தொழில் முனைவோர்)
2. முதல் தலைமுறை தொழில் முனைவோர் (சுய உதவிக்குழு குடும்ப நிறுவனங்கள்)
3. நுண், குறு, சிறு தொழில் நிறுவனங்கள் (சுய உதவிக் குழு உறுப்பினர் நிறுவனங்கள்)
4. குழு தொழில் நிறுவனங்கள் (தொழிற்குழுக்கள், உற்பத்தியாளர் குழுக்கள்)
5. உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் (வேளாண் பொருட்களை மதிப்புக் கூட்டிவிற்கும் நிறுவனங்கள்) ஆகியவைப் பயனடைகின்றன.

### மதி சிறகுகள் தொழில்மையத்தில் என்னென்ன சேவைகள் கிடைக்கின்றன ?

**தொழில் உருவாக்க சேவைகள்**

- தொழில் முனைவோரைத் தேர்ந்தெடுத்தல்
- தொழில் திட்டம் உருவாக்குதல்
- தொழில் திட்டம் வழங்குதல்



**வழங்கப்படும் தொழில்வசதிகள்**

- தொழில் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தல்
- தொழில் நிதிப் பெற ஆதரவளித்தல்

**வணிக வழிகாட்டுதல்**

- செயல்பாட்டு நிபுணர்களுடன் இணைந்து வணிக திட்டங்களை மதிப்பிடுதல்
- சந்தை விவரங்கள் மற்றும் இணைப்புகளை வழங்குதல்
- பிற துறைகளிடமிருந்து நலத்திட்டங்களைப் பெற இணைப்பை ஏற்படுத்துதல்


**தொழில்/வணிக இணைப்பு**

- தொழில் நடவடிக்கைகளுக்கான தகவல் இணைப்பை ஏற்படுத்துதல்
- துறைகளின் தகவல்களை வழங்குதல்
- தொழிற்பயிற்சிகள் மற்றும் தொழிற்பட்டறைகளுக்கு இணைத்தல்
- தொழில் திட்டங்களுக்கான ஆலோசனைகளுக்கு நிபுணர்களுடன் இணைத்தல்
- தொழிற்துறை மற்றும் இதர தொழில் முனைவோர்களுடன் இணைத்தல்

**மதிப்புக் கூட்டுதல் மற்றும் இதரசேவைகள்**

- பயனாளர்களுக்கான PAN Card விண்ணப்பிக்க உதவுதல்
- GST பதிவு, FSSAI உரிமம் பெற உதவுதல்
- இணையவழி அணுகலுக்கு வழிகாட்டுதல்
- தொழில் முனைவோர்களுக்கு வேண்டிய உரிமம் மற்றும் சான்றுகள் பெற உதவுதல்
- தொழில் முனைவோருக்கு வருமானவரி தாக்கல் மற்றும் கணக்கியலுக்கு உதவுதல்
- தொழில் முனைவோருக்கு தணிக்கை செயல்முறைகளுக்கு உதவுதல்

போன்ற தங்களுக்கு வேண்டிய அனைத்து விதமான உதவிகளையும் கேட்டுப் பெற முடியும்.



# நமது திட்டங்களைத் தெரிந்து கொள்வோம்

## மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை நகரப் பகுதிகளில் விற்பனை செய்திட உருவாக்கப்பட்ட

# பூமாலை வணிக வளாகங்கள்

ஊரகப் பகுதியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நகர பகுதியில் விற்பனை செய்ய ஏதுவாக ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட அளவிலான முதன்மை விற்பனை வளாகமும், தேவையின் அடிப்படையில் கூடுதல் வணிக வளாகங்களும் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டன. இவ்வணிக வளாகங்களுக்கு அன்றைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "பூமாலை வணிக வளாகம்" என பெயர் சூட்டப்பட்டு பெருமை சேர்க்கப்பட்டது.

அரியலூர், திருப்பூர் மற்றும் புதிய மாவட்டங்கள் நீங்கலாக பிற மாவட்டங்களில் 29 பூமாலை வணிக வளாகங்கள் செயல்பட்டு வருகின்றன. பல வருடங்களாக உரிய பராமரிப்பு இன்றி இருந்த இவ்வளாகங்களை சீரமைக்கும் பொருட்டு 29 வணிக வளாகங்களில் பெரம்பலூர் மாவட்ட வணிக வளாகம் சீரமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதாலும், நாகப்பட்டினம் மாவட்ட பூமாலை வணிக வளாகம் முழுவதுமாக சேதமடைந்ததாலும், முதற்கட்டமாக 27 மாவட்ட பூமாலை வணிக வளாகங்கள், ரூபாய் 5.72 கோடி மதிப்பில் புனரமைப்பு மற்றும் பழுதுநீக்கம் செய்து, ஒரே மாதிரியான வண்ணம் பூசிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, புதுப்பிக்கப்பட்ட பூமாலை வணிக வளாகக் கட்டிடங்களில் உள்ள கடைகளை புதிய வழிகாட்டு நெறிமுறையின்படி தேர்வு செய்யப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின் பயன்பாட்டிற்கு வழங்கி, சுய உதவிக் குழு பொருட்களின் சந்தை பரிமாற்றத்தையும் வர்த்தகத்தையும் மேம்படுத்திடும் வகையில் 28.06.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதுப்பிக்கப்பட்ட பூமாலை வணிக வளாகக் கட்டிடங்களை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்கள் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யவும், ஆயத்த ஆடை தையல் கூடம், அழகு நிலையம் போன்ற சேவை தொழிலினை மேற்கொள்ளவும், பூமாலை வணிக வளாகங்களை பயன்படுத்தி கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.









# சின்னப்பேட்டை 6-வது மகளிர் குழுவின் வெற்றிக்கதை

கடலூர் மாவட்டம், அண்ணா கிராமம் ஒன்றியம், சின்னப்பேட்டை ஊராட்சியில் செயல்படும் சின்னப்பேட்டை 6-வது மகளிர் குழுவின் வெற்றிக் கதையை அக்குழுவின் உறுப்பினர்கள் கூறக் கேட்போம் வாருங்கள்.

நாங்கள் கடலூர் மாவட்டம், அண்ணாகிராமம் ஒன்றியத்திற்கு உட்பட்ட சின்னப்பேட்டை ஊராட்சியில் 2009 ஆம் ஆண்டு 12 உறுப்பினர்களை கொண்டு சின்னப்பேட்டை 6வது மகளிர் சுய உதவிக் குழுவினை ஆரம்பித்து நடத்தி வந்தோம் அப்போது எங்கள் குழுவில் உள்ள உறுப்பினார்களுக்கு போதிய வருமானமின்றி தொழில் செய்ய ஆர்வம் இருந்தும் போதிய வழிகாட்டுதலுமின்றி தன்னிச்சையாக செயல்பட்டு வந்தோம்.



அந்த சமயத்தில், 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் எங்கள் ஊராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டு, இலக்கு மக்கள் பட்டியல் எடுக்கப்பட்டது. இத்திட்டம் பற்றி அறிந்ததும் சின்னப்பேட்டை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் எங்களது குழுவினை இணைத்து தற்போது வரை சிறப்பாக செயல்பட்டு வருகிறோம் ஆரம்ப காலத்தில் சின்னப்பேட்டை தொடக்கப்பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்து இருந்தது எனவே பள்ளி தலைமை ஆசிரியர் எங்களிடம் தெரிவித்தார்கள். அதன் பிறகு எங்கள் குழுவில் உள்ள அனைவரிடம் பேசி அவர்களின் குழந்தைகளை சின்னப்பேட்டை தொடக்கப் பள்ளியில் சேர்த்தோம்.

எங்கள் ஊராட்சியில் கழிவறைகள் கட்டித் தர யாரும் முன் வராத காரணத்தால் அந்த பணியினை எங்கள் குழு உறுப்பினர்களை கொண்டு கழிவறைகளைக் கட்ட ஆரம்பித்தோம். மேலும் அக்கழிவறை கட்ட போதுமான பொருட்கள் இல்லாத காரணத்தால் நாங்களே அந்த பொருட்களை தயார் செய்து கழிவறைகளை கட்டிக் கொடுத்தோம். எங்களின் சிறப்பான பணியினைப் பார்த்துமேலும்மற்றஊராட்சிகளிலும்கழிவறைகட்டிக் கொடுக்கும்படி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கேட்டார்கள். அதன் பின்பு 6 ஊராட்சிகளில் 720 கழிவறைகள் கட்டிக் கொடுத்தோம். மேலும் PMAY மற்றும் AWAS-PLUS வீடும் கட்டி தர சொன்னார்கள். எனவே வீடு கட்ட இயலாத ஏழை எளிய மக்களுக்கு வீடுகள் கட்டி கொடுத்து வருகிறோம். இதனால் எங்கள் குழு உறுப்பினர்கள் மற்றும் எங்கள் ஊராட்சியை சேர்ந்த மகளிர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.



மக்கள் தகவல் பலகை (Citizen information board) செய்வது பற்றி பெரிய காட்டுப்பாளையம் ஊராட்சிக்கு சென்று பயிற்சி பெற்று, தற்போது எங்கள் ஊராட்சியிலேயே தகவல் பலகை செய்து வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு கொடுத்து வருகிறோம். இதன் மூலம் குழு உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பும், வருமானமும் கிடைத்து வருகிறது. எங்களின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்து வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களது குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்" என்று சின்னப்பேட்டை 6-வது மகளிர் குழுவின் உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

## DDU-GKY திட்டத்திற்கு நன்றி...



திண்டுக்கல் மாவட்டம், கோம்பைப்பட்டி கிராமத்தில் வசித்து வரும் யுவராஜா விவசாய குடும்பத்தை சேர்ந்தவர். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த அவரால் பள்ளிப் படிப்பிற்கு பிறகு கல்லூரிக்குச் செல்ல முடியவில்லை. இதனால் அவருக்கு எந்த தொழில்நுட்பம் குறித்த விபரமும் தெரியவில்லை. இருப்பினும் யுவராஜா பல்வேறு இடங்களில் வேலை வாய்ப்பினை தேடி வந்தார். மேலும் ஒரு தொழில்நுட்ப தொழிலைக் கற்றுக் கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வந்தார். முயற்சியின் பயனாக, DDU-GKY திட்டத்தின் மூலம் DMW கல்வி மற்றும் அறக்கட்டளையில் வேலை வாய்ப்பு சார்ந்த திறன் பயிற்சி பெற யுவராஜா தேர்வு செய்யப்பட்டார். பயிற்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்ட அவருக்கு பயிற்சிக்குப் பின்னர் சென்னையில் உள்ள கார்மென் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்டில் ரூ.16,500/மாதம் சம்பளத்துடன் வேலை வாய்ப்பு கிடைத்தது. தற்போது தனது பணியில் ஊக்கத்துடன் ஈடுபட்டு வரும் யுவராஜா "நிறைய புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுக் கொண்டேன் மற்றும் ரோபாட்டிக்ஸ் துறையில் பயிற்சி பெற உள்ளேன்" என்று மகிழ்வுடன் கூறுவதுடன், தனக்கு தொழில்நுட்ப பயிற்சியும், வேலைவாய்ப்பும் பெற்றுத் தந்த DDU-GKY திட்டத்தின், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கும் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

# அனைத்து மாவட்ட வள பயிற்றுநர்களுக்கு (வேளாண்) உணர்திறன் பயிற்சி

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட வள பயிற்றுநர்களுக்கு (வேளாண்) 5 நாட்கள் உணர்திறன் பயிற்சி வேலூர் மாவட்டத்தில் 28-08-2023 முதல் 01-09-2023 வரை வேலூர் பூமாலை வணிக வளாகம் வெல்மா அரங்கத்தில் நடைபெற்றது. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை ஏற்று பயிற்சியை தொடங்கி வைத்து, "இந்த பயிற்சியில் கற்றறிந்த தொழில் நுட்பங்களை வேளாண் மகளிர்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் வேளாண்மையின் மூலம் நல்ல வருமானத்தை ஈட்ட வழிவகுக்கும்படி அறிவுறுத்தியதுடன், பயிர் காப்பீடு திட்டத்தினை பயன்படுத்திட வேண்டும் என்றும், அதன் மூலம் இயற்கை இடர்பாடுகள் ஏற்படும்போது பயனடைய வேண்டும்" என்றும் கூறினார்கள்.

இந்த பயிற்சியில் வேளாண் அறிவியல் மையம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கால்நடைத்துறை, பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், கால்நடை பல்கலைக்கழகம் சார்ந்த விஞ்ஞானிகள், மற்றும் வல்லுநர்கள் பயிற்சி அளித்தார்கள். இதில் ஒருநாள் களப்பயணமாக இயற்கை வேளாண்மை, ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்பு மற்றும் காளான் வளர்ப்பு பண்ணைகளுக்கு பயிற்சியில் ஈடுபட்ட அனைவரும் நேரில் சென்று பார்வையிட்டு அவர்கள் எப்படி செயலாற்றுகிறார்கள் என்பதை கேட்டறிந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் திரு.உ.நாகராஜன், மாநில அலுவலகத்தில் இருந்து மூத்த வேளாண் ஆலோசகர் திரு. ரகுராமன், திட்ட மேலாளர் (வேளாண்மை) திரு. செந்தில் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பயிற்சியின் இறுதி நாளில் பயிற்சியில் பங்கேற்ற அனைவருக்கும் வேலூர் மாவட்ட திட்ட இயக்குனர் அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார்.



மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன்
பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ்
செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள்
தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.

வாழ்வாதார உதவி அழைப்பு எண்

# 155 330

LIVELIHOOD HELPLINE NUMBER

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல்
மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ugkytn2016@gmail.com

# ஆரோக்கியம் மகளிர் சுய உதவிக் குழு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் ஆரோக்கியம் மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றி குறித்து அதன் உறுப்பினர் திருமதி. சங்கரி சொல்வதைக் கேட்போம் வாருங்கள்...

"எங்கள் ஆரோக்கியம் மகளிர் சுய உதவிக் குழுவானது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் கடந்த 2022-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினரான நான், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தொழில் முனைவோர் பயிற்சியைப் பெற்று, மூலிகை டீ, மூலிகை ஊறுகாய், மூலிகை சாறு, மூலிகை கசாய வகை பவுடர்கள் தயாரித்து விற்பனை செய்து வந்தேன். இதன் மூலம் எனக்கு கணிசமான வருமானம் கிடைத்து வந்தது.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வல்லாரை, முருங்கை, கற்றாழை, வாழைத்தண்டு, தூதுவளை, பிரண்டை, முடக்கத்தான், பசலை ஆகிய கீரை வகைகளின் சூப் மற்றும் பொடிகளுடன் பல்வேறு மசாலா பவுடர் வகைகள், சத்து மாவு போன்றவற்றையும் தயாரித்து "அமிர்தம்" என்ற பெயரில் விற்பனை செய்து வந்தேன்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் உணவு பதப்படுத்தும் திட்டத்தின் (PMFME) மூலம் கருக்கினில் அமர்ந்தவள் கூட்டமைப்பு மூலமாக எனக்கு ரூ. 40,000/- கடனுதவி வழங்கப்பட்டது. இத்தொகையினை உரிய நேரத்தில் பெற்று என் தொழிலை விரிவுப்படுத்த முதலீடு செய்தேன்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் எங்கள் குழுவின் மூலம் விற்பனை அரங்கு அமைத்து தரமான மூலிகை சூப் வகைகள், சத்து மாவு, சிறுதானிய உணவு வகைகள் விற்பனை செய்தோம். கணிசமான லாபம் எங்கள் குழுவின் உறுப்பினர்களுக்கு கிடைத்தது. தற்போது எங்கள் ஆரோக்கியம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாக தொழில் செய்து மாதந்தோறும் வருவாய் பெற்று வருகிறோம். எங்களுக்கு இந்த வாய்ப்பினை உருவாக்கித் தந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார மையத்திற்கு மிக்க நன்றி" என்கிறார் திருமதி. சங்கரி.






# வாழ்வை வளமாக்கிய வாழ்வாதார இயக்கம் பணியாளர்களுக்குத் திறனுயர்வு!

எனது பெயர் புனிதா. நான், சென்னை, சைதாப்பேட்டை பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் தீபம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினராக உள்ளேன். எனது கணவர் வர்ணம் பூசுதல், உள் அலங்கார வேலைகள் உள்ளிட்ட எல்லா வேலைகளையும் செய்து வந்தார். அவருடைய வருமானம் எங்களின் அன்றாட வாழ்விற்கும், எங்கள் குழந்தைகளின் கல்விச் செலவுகளுக்கும் போதுமானதாக இல்லை. எங்கள் குடும்பம் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வந்தது.

இந்நிலையில் நானும், என் கணவரும், சொந்தமாக கடை வைத்து அதன் மூலம் வர்ணம் பூசுதல், உள் அலங்கார வேலைகள் போன்றவற்றை செய்ய முடிவு செய்தோம். அதற்காக நான் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழுவின் மூலம் ரூபாய் 2 இலட்சம் உள்கடனாக பெற்று சென்னை, சைதாப்பேட்டையில் Varun Interior என்ற பெயரில் ஒரு கடையை தொடங்கினோம். தற்போது எங்கள் கடையில் 50 பேருக்கு மேல் பணிபுரிந்து வருகின்றனர். இப்போது எங்கள் குடும்பத்திற்கு மாதந்தோறும் ரூ.30,000/- வரை வருமானம் கிடைக்கிறது.




இதற்கு காரணமாக இருந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எங்கள் குடும்பம் சார்பாக என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

புனிதா, தீபம் மகளிர் சுய உதவிக் குழு,
சைதாப்பேட்டை, சென்னை.

# பொருளாதார முன்னேற்றம் தந்த இயக்கம்




என் பெயர் நிர்மலா, நான் சென்னை, அரும்பாக்கம் பகுதியில் செயல்பட்டு வரும் அபிநயா மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். இந்தக் குழுவானது கடந்த 2019ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வருகிறது. குழுவின் சார்பில் முதல் முறையாக ரூ. 5 இலட்சம் வங்கிக் கடன் பெறப்பட்டது. அதில் எனக்கு ரூ. 50 ஆயிரம் கடனாக தந்தார்கள். இந்தக் கடன் தொகை பெறுவதற்கு முன்பு வரை எனது வீட்டிலேயே துணிகளுக்கு துணிகளுக்கு ஆரி எம்ப்ராய்டரிங் செய்து வந்த நான், கடன் தொகை பெற்ற பிறகு எனது குழுவில் உள்ள மேலும் இரு நபர்களையும் சேர்த்துக் கொண்டு ஆரி எம்ப்ராய்டரிங் செய்து வந்தேன். தொடர்ந்து குழுவின் மூலம் 2வது வங்கிக் கடன் பெற்று அதில் எங்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 75 ஆயிரம் வீதம் வழங்கப்பட்டது. அந்தப் பணத்தை கொண்டு நாங்கள் 5 நபர்கள் சேர்ந்து தனியாக ஒரு அறையை வாடகைக்கு எடுத்து, அதில் துணிகளுக்கு ஆரி எம்ப்ராய்டரிங் செய்து ஒவ்வொருவரும் கூடுதல் வருவாய் பெற்று வருகிறோம். மேலும் ஆரி எம்ப்ராய்டரிங் குறித்த பயிற்சிகளையும் வழங்கி வருகிறோம். எங்களது வாழ்வாதார முன்னேற்றத்திற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு அபிநயா மகளிர் சுய உதவிக் குழுவின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- நிர்மலா, அபிநயா மகளிர் சுய உதவிக் குழு
அரும்பாக்கம், சென்னை

# திரு மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக் கதை

இராமநாதபுரம் மாவட்டம், அபிராமம் பேரூராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் திரு மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றி குறித்து அதன் உறுப்பினர்கள் கூறுவதைக் கேட்போம் வாருங்கள்...

“அபிராமம் பேரூராட்சியில் வசிக்கும் 14 பெண்கள் இணைந்து 2018ஆம் ஆண்டு திரு மகளிர் சுய உதவிக் குழுவினை துவக்கி, RDCC வங்கியில் சேமிப்பு கணக்கு தொடங்கி செயல்பட்டு வருகிறோம். குழுவில் சேர்ந்ததால் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி, குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி போன்றவற்றை வழங்கினார்கள். பயிற்சியின் மூலம் பெண்கள் முன்னேற்றம் பற்றியும், பெண் உரிமை பற்றியும், சேமிப்பின் முக்கியத்துவம் பற்றியும் விவரமாகத் தெரிந்து கொண்டோம். மாதம் நான்கு முறை சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தி குழு உறுப்பினர்களுக்குள் குழந்தைகளின் படிப்பிற்கும், மருத்துவ செலவிற்கும், சுய தொழில் செய்வதற்கும் குடும்பத்திற்கு தேவையான கடன் உதவி வழங்கப்பட்டது. சேமிப்பிலிருந்து கடன் பெற்று மாதாமாதம் அசலும் வட்டித் தொகையும் தவணை முறையில் செலுத்தி வந்ததால் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

எங்கள் திரு மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் உள்கடன் வழங்கி வருகிறோம். அதிகமாக சேமிப்பு உள்ளதால் ஒரு உறுப்பினருக்கு ரூ.10,000/- வரை உள்கடன் வழங்கப்படுகிறது. இத்தொகையைக் கொண்டு மிக்சர் போன்ற தின்பண்டங்களைத் தயாரித்து கடைகளுக்கு விற்பனை செய்து வருகிறோம். பொருளாதார வளர்ச்சிக்காக தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ரூ.10,000/- சுழல் நிதி வழங்கப்பட்டது. இந்த தொகை எங்கள் குழு உறுப்பினர்களின் பொருளாதாரத் தேவைக்கு மிகவும் உதவியாக இருந்தது. RDCC வங்கியில் சேமிப்பு கணக்கு தொடங்கி, சேமிப்பு பணத்தை ஒவ்வொரு மாதமும் வங்கியில் செலுத்தி பணத்தை எடுத்து உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கி முறையாக வசூல் செய்து சிறப்பாக செயல்படுத்தி வந்ததால் மீண்டும் RDCC வங்கியின் மூலம் ரூ.5,00,000/- பொருளாதார கடன் பெற்று அதிக அளவில் மிக்சர் தயார் செய்து கடைகளுக்கு விற்பனை செய்து வருகிறோம். முறையாக கடன் தொகையை திரும்பச் செலுத்துகிறோம்.

நாங்கள் அதிக வட்டி கடன் பிரச்சனையிலிருந்து மீள்வதற்கும், எங்களுடைய தொழிலை மேம்படுத்துவதற்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவி புரிந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கும் எங்களுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்” என்று திரு மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றனர்.

- உறுப்பினர்கள், திரு மகளிர் சுய உதவிக் குழு



# வணிகம் வளர்க...

## திருநெல்வேலி மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின் சிறப்பான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்படுகின்றன.

## திருநெல்வேலி மாவட்டம்

| சுய உதவிக் குழுவின் பெயர் | தயாரிப்புப் பொருளின் பெயர் | |
|---|---|---|
| கருப்பட்டி உற்பத்தியாளர் சுய உதவிக் குழு<br>திருநெல்வேலி மாவட்டம்.<br>கைபேசி : 95669 96550 | பனை வெல்லம் |  |
| லாசல் பிளீசிங் மகளிர் சுய உதவிக் குழு,<br>திருநெல்வேலி மாவட்டம்.<br>கைபேசி : 82489 18594 | முருங்கை இலைப் பொடி |  |
| இமயம் மகளிர் சுய உதவிக் குழு,<br>திருநெல்வேலி மாவட்டம்.<br>கைபேசி : 88708 57748 | பனை ஓலைப் பொருட்கள் |  |
| பனை ஓலை உற்பத்தியாளர் சுய உதவிக் குழு,<br>திருநெல்வேலி மாவட்டம்.<br>கைபேசி : 94878 68737 | மூங்கில் கைவினைப் பொருட்கள் |  |
| ரஸியா மகளிர் சுய உதவிக் குழு,<br>திருநெல்வேலி மாவட்டம்.<br>கைபேசி : 98433 86345 | கால் மிதியடிகள் |  |

# நிலக்கடலை மற்றும் எள் உற்பத்தியை அதிகரிக்க, வல்லுநர்களின் திறனுயர்த்தும் பயிற்சிகள்!

**தமிழ்நாட்டில் கடலை எண்ணெய் மற்றும் நல்லெண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க, உழவர் பயிற்றுநர்களுக்கு (SPARKS) தொழிற்பயிற்சி வழங்கப்பட்டது.**

விரிவாக்கக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் VKP திட்டம் இணைந்து, 5 மாவட்டங்களின் 30 ஸ்பார்க்குகளுக்கு 3 நாட்கள் பயிலரங்கை ஏற்பாடு செய்தது. இதில் நிலக்கடலை மற்றும் எள் வகைகள் மீது விதையிலிருந்து மதிப்புச் சங்கிலி வரையிலான தொழிற் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சி கோயம்புத்தூர் DoEE, TNAU மையத்தில் நடைபெற்றது. டாக்டர் R. தமிழ் வேந்தன், பதிவாளர், TNAU அவர்கள் பயிலரங்கை தொடங்கி வைத்தார்.

## மிக முக்கியமான இரண்டாம் கட்ட விவசாய மேம்பாட்டுப் பயிற்சி

இதன் இரண்டாம் கட்ட பயிற்சியில் TNAU நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானிகள் உழவர்கள் நிலக்கடலை மற்றும் இஞ்சி சாகுபடியில் மேம்பட்ட அறிவுடன் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, வகுப்பறை பயிற்சி, செய்முறை விளக்கம், EVக்கள் - FPOக்கள் மற்றும் புதிய அதிக மகசூல் வகைகள், கட்டிங் எட்ஜ் சாகுபடி தொழில்நுட்பம், ஊட்டச்சத்து மேலாண்மை பயிற்சிகள், அறுவடைக்குப் பிந்தைய மற்றும் மதிப்புக் கூட்டல் நுட்பங்கள் மற்றும் சந்தை நுண்ணறிவுகள் ஆகியவை பயிற்றுவிக்கப்பட்டன.

இந்த பயிற்சியில் வகுப்பறை பயிற்சி, செய்முறை விளக்கம், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பு நிறுவனத்தில் கடலை எண்ணெய், நல்லெண்ணெய் உற்பத்தி ஆலையை நேரடி பார்வையிடல் ஆகிய பயிற்சிகள் இடம் பெற்றிருந்தன. TNAU நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானிகள் வகுப்புகளை நடத்தி, தமிழ்நாட்டில் நிலக்கடலை மற்றும் எள்ளுக்கு உள்ள தேவை, புதிய அதிக மகசூல் கொடுக்கக்கூடி பயிர் வகைகள், விவசாயத்தில் களையெடுத்தல், தண்ணீர், உர மேலாண்மை, ஒருங்கிணைந்த IPDM செயல்முறைகள், பயிருக்கு ஏற்படும் கோளாறுகள், ஊட்டச்சத்து குறைபாடு, மீட்டெடுக்கும் முறைகள், TNAU உயர்தர ஊட்ட உரம், நிலக்கடலை விவசாயத்திற்குத் தேவையான இயந்திரங்கள், அறுவடைக்குப் பிந்தைய செயல்பாடுகள் மற்றும் பொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல், சந்தையறிவு மற்றும் தமிழ்நாட்டில் பல்வேறு வழிகளில் நிலக்கடலை மற்றும் எள் சாகுபடியை ஊக்குவிப்பதில் KVK மையங்களுக்கு உள்ள பொறுப்புகள் ஆகியவை பயிற்றுவிக்கப்பட்டதுடன், “நிலக்கடலை மற்றும் எள் உற்பத்தியில் விதை முதல் மதிப்புக் கூட்டுதல் வரை” தொடர்பான தமிழ் கைப்புத்தகம் உழவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த பயிற்சியில் மாவட்டத்திற்கு 6 உழவர்கள் வீதம் 5 மாவட்டங்களை சேர்ந்த 30 உழவர்கள் பயனடைந்தனர். இந்த பயிற்சியை டாக்டர் R. தமிழ்வேந்தன், பதிவாளர் TNAU., கோயம்புத்தூர் அவர்கள் தொடங்கி வைத்தார். பயிற்சித் திட்டம் குறித்து விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் P. P. முருகன் தொடக்கவுரையாற்றினார். CPBG இயக்குநர் டாக்டர் ஆர். ரவிகேசவன், கார்ட்ஸ் இயக்குநர் டாக்டர். T. சுரேஷ்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். Th. M. சக்ரபாணி, இணை தலைமை இயக்க அதிகாரி (VKP), ஆலோசகர் (VKP) திருமதி R. திலகவதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முனைவர் P. P. முருகன், DoEE, Dr. J. ஆக்ஸிலியா, முனைவர் (தோட்டக்கலை), டாக்டர். J. திலகம், உதவி முனைவர் (விரிவு) பயிற்சி திட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.



# உழவர்களின் வளத்தை உயர்த்திட, திட்டப் பணியாளர்களுக்குத் திறனுயர்வு!

சமுதாயப் பண்ணைப் பள்ளிப் பயிற்சி (CFS), வளமான உழவிற்கு மிக முக்கியமானதாகும். அந்த CFS பயிற்சிகளை கண்காணித்து உழவர்களை மேம்படுத்துவது திட்டத்தின் முக்கிய பொறுப்பாக உள்ளது. அவற்றில் சில இதோ...

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP-TNRTP), தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் வேளாண் தொழில்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுகளை வழங்கி வருகிறது. அதில் குறிப்பாக உழவர்களின் அதிக மகசூலுக்கு வேண்டிய தரமான விதைகள், பசுமையான நாற்றுகள், இயற்கை உரங்கள் மற்றும் விவசாயத்திற்கான நவீன இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கான நிதியுதவிகளையும், தொழில்நுட்பம் மற்றும் வணிக இணைப்பையும் ஏற்படுத்தி கொடுத்துள்ளது. இதன் மூலம் பெண் விவசாயிகள் உழவர் உற்பத்தியாளர் குழுக்களாக செயல்பட்டு வளமான மகசூலை ஈட்டுகின்றனர். இதற்காக திட்டத்தின் மூலம் சமுதாயப் பண்ணைப் பள்ளி (CFS) வழியாக பண்ணைப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.



ஊரகப் பகுதிகளில் நடத்தப்படும் இந்த CFS பயிற்சிகளை கண்காணிக்க மற்றும் வழிநடத்த, திட்டப் பணியாளர்களுக்கு பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், 'தோட்டக்கலை பயிர் வளர்ப்பு நவீன தொழில் நுட்பங்கள்' குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. இதில் தோட்டப்பயிர் வளர்ப்பு, நாற்றங்கால் மற்றும் பொருட்களை மதிப்புக் கூட்டுதல் ஆகிய தொழிற் பயிற்சிகள் இடம் பெற்றிருந்தன. இப்பயிற்சிகளைப் பெற்ற திட்டப் பணியாளர்கள் அந்தந்த மாவட்டங்களில் இயங்கும் CFS பயிற்சிகளை கண்காணித்து வழிநடத்தி வருகின்றனர்.

# பால் உற்பத்திக்காக பயிற்றுநர்களுக்கு பயிற்றுவித்து திறனுயர்த்தப்பட்டது!




தமிழ்நாட்டின் பண்ணை வளங்களை உயர்த்த வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP-TNRTP), தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களில் உள்ள பெண் உழவர்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுகளை வழங்கி வருகிறது. அதில் மிக முக்கியமான பண்ணை வளமானது பால் பண்ணைகளாகும். இந்த பால் பண்ணைகளின் தரத்தை உயர்த்துவதற்கு திட்டத்தின் மூலம் உழவர்களுக்கு பசு மாடுகளின் வகைகள், சத்து மிகுந்த தீவனங்களைக் கொடுத்தல், மாடுகளை நோய்த் தொற்றிலிருந்து காத்தல், பால் மகசூல், ஒருங்கிணைந்த கூட்டுறவு முறையில் பால் வழங்குதல் மற்றும் அதிக வருவாயை ஈட்டுதல் போன்ற அனைத்து தொழில் மேம்பாட்டு முறைகளையும் பயிற்றுவிப்பதுடன் அதற்கான நிதியுதவியையும் வழங்கி வருகிறது.

இந்த பண்ணை வள மேம்பாட்டு முயற்சிகளில் ஒரு பகுதியாக பால் உற்பத்தியாளர்களை பயிற்றுவிக்கும் 30 பயிற்றுநர்களுக்கு (ஸ்பார்க்ஸ்) மாதவரம் ஆவின் திறன் மேம்பாட்டு மையத்தில், கால்நடை வளர்த்தல் தொடர்பான 3 நாட்கள் திறனுயர்வு பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் தீவன சாகுபடி, மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரித்தல் பசுக்களுக்கான குடற்புழு நீக்கம், தடுப்பூசி, கால்நடை கழிவுப்பொருள் மக்கவைத்தல், பயன்பாடு மற்றும் கால்நடை காப்பீடு திட்டங்கள் போன்றவை பயிற்றுவிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டனர். இந்த பயிற்றுநர்கள் பால் உற்பத்தியாளர்களை பயிற்றுவித்து பால் பாண்ணை வளத்தில் மேம்படுத்துவர்.

# வாழைப்பூ அடை

நாம் உண்ணும் உணவுதான் நமது உடலுக்கு வலிவையும், பொலிவையும் தரும். எனவேதான் நம் முன்னோர்கள் "உணவே மருந்து" எனக் கூறி, சத்து மிகுந்த உணவுகளை சாப்பிட்டு வந்தனர். தற்போது வாழ்க்கையே இயந்திரமயமாகிவிட்ட சுழலில் சுவைக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பதால், சத்தான உணவுகளை சாப்பிடுவது குறைந்து வருகிறது. எனவே உடலுக்கு நலம் தரும் உணவுகள் வகைகள் குறித்த விபரங்கள் நமது இதழில் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது. இம்முறை வாழைப்பூ அடை என்ற சத்தான உணவு குறித்து பார்க்கலாம் வாருங்கள்.



### தேவையானப் பொருட்கள்

ஆய்ந்து நறுக்கிய வாழைப்பூ ஒரு கப், அரிசி ஒரு கப், உளுந்து கால் கப், கடலைப்பருப்பு கால் கப், வெங்காயம் 3, கடுகு கால் டீஸ்பூன், கறிவேப்பிலை, கொத்தமல்லி சிறிதளவு, பச்சை மிளகாய் 3, தேங்காய் துருவல் 2 டேபிள் ஸ்பூன், உப்பு மற்றும் ஆலிங் ஆயில் - தேவையான அளவு.

### செய்முறை:

அரிசி, உளுந்து, கடலைப்பருப்பைத் தனியாக ஊறவைத்துக்கழுவி,அரைத்துஒன்றாகக்கலந்து கொள்ளவும். பச்சை மிளகாய், வெங்காயத்தை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். கடாயில் எண்ணெய் விட்டு கடுகு போட்டு தாளித்து வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கொத்தமல்லி தாளித்து, அரைத்த மாவில் கொட்டவும். நறுக்கிய வாழைப்பூ, தேங்காய் துருவல், உப்பு சேர்த்து அடை மாவு பதத்தில் கலந்து கொள்ளவும். தோசைக்கல்லில் அடைகளாக வார்த்து இருபுறமும் லேசாக ஆலிங் ஆயில் விட்டு, வேக வைத்து சுட்டு எடுக்கவும். சுவையும் சத்தும் மிகுந்த இந்த வாழைப்பூ அடையை அனைவரும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

குறிப்பு: ஆரோக்கியமான இந்த வாழைப்பூ அடை அதிக நேரம் பசி தாங்கும்.

## பயனுள்ள குறிப்புகள்

- ஊதுவத்தி பாக்கெட்டுகள் காலியானதும் அவற்றை துணி வைக்கும் பீரோவில் போட்டு வைத்தால் பீரோவை திறக்கும் போது கமகமக்கும்.
- நைலான் கயிரை வாங்கியவுடன் சோப்புநீரில் நனைத்து உபயோகித்தால் நீண்ட நாள் உழைக்கும்.
- தரையில் எண்ணெய் கொட்டி விட்டால் அதன்மிது கோலப்பொடியை தூவிவிட்டு துடைத்தால் எண்ணெய் பசை நீங்கி விடும்.
- பூண்டு உரிப்பதற்கு முன் தண்ணீரில் ஐந்து நிமிடம் போட்டு விட்டு உரித்தால் தோல் கைகளில் ஒட்டாது.
- தேங்காயை ஃபிரிட்ஜில் வைத்து ஜில்லென்று எடுத்து உடைத்தால் சுலபமாக உடைத்து விடலாம்.
- மெழுகு வர்த்திகளை ஃபிரிட்ஜில் வைத்து தேவைப்படும் போது உபயோகப்படுத்தினால் சீக்கிரத்தில் உருகாது அதிக நேரம் எரியும்.
- தினமும் சிறிது துளசி இலைகளை மென்று தின்றால் சுவாசப்பகுதி நோய்கள் வராது.
- கீரையை வேகவிடும்போது சிறிது எண்ணெயை அதனுடன் சேர்த்து வேக வைத்தால் கீரை பசுமையாக ருசியாக இருக்கும்.

திரு. **ப. பொன்னையா,** இ.ஆ.ப.,
உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநர்

திருமதி. **க. முத்து மீனாள்,**
கூடுதல் இயக்குநர்

திரு. **இரா. இரவிச்சந்திரன்,**
தகவல் மற்றும் தொழில்நுட்ப மேலாளர்

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்

## தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வெற்றியை நோக்கிப் பயணம்

இராஜாக்கமங்கலம் கூட்டமைப்பானது 10.10.200ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 25.03.2010 அன்று மறுசீரமைக்கப்பட்டு 38/2010 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டது. இராஜாக்கமங்கலம் ஊராட்சியில் 32 குக்கிராமங்கள், 13 குடியிருப்பு மன்றங்கள், 8280 குடும்பங்கள் 26,750 மக்கள் வசித்து வருகின்றனர். 2384 உறுப்பினர்கள் கொண்ட 149 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன.

சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் துயர் குறைப்பு நிதி, வருமானம் ஈட்டும் நடவடிக்கைக்கான தொழில் கடன் மற்றும் ஊக்க நிதி கடன் போன்ற திட்டங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

குறுந்தொழில் திட்டத்தின் மூலம் 6 உறுப்பினர்களுக்கு வட்டியில்லா கடனாக ரூ.14,63,500/- கொடுக்கப்பட்டு மக்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைய வழிவகை செய்யப்பட்டது. சமையல் கழிவுகளிலிருந்து இயற்கை எரிவாயு கலன் அமைக்க 51 குடும்பங்களுக்கு கடனாக ரூ.3,38,940/- வழங்கப்பட்டுள்ளது.

துயர் குறைப்பு நிதி கடனாக 1733 பயனாளிகளுக்கு ரூ.12,58,500/-மும், வருமானம் ஈட்டும் நடவடிக்கைக்கான நிதி கடனாக தொழில் செய்வதற்கு 763 உறுப்பினர்களுக்கு ரூ.1,51,63,200/-மும், ஊக்க நிதியின் மூலம் 311 உறுப்பினர்களுக்கு ரூ.52,70,000/-மும் சுழற்சி முறையில் வழங்கப்பட்டு கடன் திருப்பம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும்43கூட்டுப்பொறுப்புக்குழுக்களுக்குநபார்டு (NABARD) வங்கி மூலம் ரூ.1,24,62,385/-ம், இந்தியன் வங்கி மூலம் 73 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.16,02,200/-ம் கடனாகப் பெறப்பட்டுள்ளது. மேலும் மேற்கூறிய வங்கிகளுக்கு கூட்டமைப்பு நிர்வாகிகள் வங்கியில் ஊக்குநர்களாக நியமிக்கப்பட்டு பெறப்பட்ட கடனை கடன் நிலுவை இல்லாமல் கடன் திருப்பம் செய்ய வங்கிகளுடன் இணைந்து செயல்பட்டமைக்கு மொத்த கடன் தொகையில் 2 கூட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்டதில் தற்போது நபார்டு வங்கி மூலம் ரூ.1,23,547/-, இந்தியன் வங்கி மூலம் ரூ.88,750/- மற்றும் ஐசிஐசிஐ வங்கி மூலம் ரூ.73,096/- என மொத்தம் ரூ.9.43 இலட்சம் வருமானமாக பெற்றுள்ளனர்.

கூட்டமைப்பில் உள்ள உறுப்பினர்களுக்கு தொழில் செய்வதற்கும், எதிர்பாராத விதமாக ஏற்படும் இடர்பாடுகளுக்கும் குறைந்த வட்டியில் (1 -0.50% ) கடன் கொடுத்து வாழ்வாதாரத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வழிவகை செய்யப்படுகிறது.

இந்த மாபெரும் வெற்றிக்கு உதவியாக இருந்த தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு ஊராட்சி அமைப்பிலான கூட்டமைப்பினர் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.



## தமிழ்நாடு கிராம வங்கி மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி

தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் கீழ் செயல்படும் கடலூர் மாவட்டத்தில் உள்ள 26 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் இணைந்துள்ள 763 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள 11,170 உறுப்பினர்களுக்கு திட்டத்தின் மூலம் துயர் குறைப்பு நிதி, வருமானத்தைப் பெருக்கும் நிதிக்கடன் திட்டம், மக்கள் வாழ்வாதாரத்தை பெருக்க கூட்டுப் பொறுப்புக் குழு கடன் திட்டம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் திட்டம் போன்றவற்றை சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



தற்போது பச்சையாங்குப்பம் கூட்டு வள மையத்திற்குட்பட்ட நாணமேடு, பச்சையாங்குப்பம் மற்றும் செம்மாங்குப்பம் ஆகிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் உள்ள 17 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தமிழ்நாடு கிராம வங்கி கடலூர் கிளையின் மூலமாக ஒரு கோடியே பத்து லட்சம் ரூபாய் கடனுதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு 2023 ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டது.



## தையல் நிறுவன கூட்டுப் பொறுப்புக்குழு



தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம், செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவிடந்தை ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் அன்னபூரணி மகளிர் சுய உதவிக் குழுவிலிருந்து 5 உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செல்வகணபதி என்ற பெயரில் தையல் தொழிலை செய்து வருகின்றனர். பயனாளிகளின் பங்குத் தொகை ரூ.12500/-, இந்தியன் வங்கியில் கடன் தொகை ரூ.2,37,500/- என மொத்தம் ரூ.2,50,000/- முதலீட்டில் 23.09.2022 அன்று தையல் தொழில் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு மாதமும் ரூ.40,000/- முதல் ரூ.60,000/- வரை வருமானம் ஈட்டி வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் நபர் ஒன்றுக்கு இலாபமாக ரூ.8000/- வரை இலாபமாக பெற்று வருகின்றனர். இந்த வருமானத்தைக் கொண்டு குடும்ப செலவு மற்றும் குழந்தைகளின் கல்விச் செலவு போன்றவற்றை மேற்கொள்கின்றனர். மேலும் கார்மெண்ட்ஸ் ஒன்றில் கூலி வேலைக்கு சென்றிருந்த அவர்கள் தற்போது சொந்தமாக தொழில் செய்ய வாய்ப்பு ஏற்படுத்தி தங்களின் வாழ்வாதரத்தை உயர்த்திய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (1,30,000 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை
தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**
அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th September 2023 Posted at Patrika Channel, Egmore.


# உற்பத்தியில் தரம் படைத்தோம்! உழவர்களின் வளம் படைத்தோம்!



| தயாரிப்புகள்: | பாரம்பரிய அரிசி வகைகள்: | சிறுதானிய வகைகள்: |
|---|---|---|
| 1. கடலை எண்ணெய் | 1. மாப்பிள்ளை சம்பா | 1. திணை |
| 2. தேங்காய் எண்ணெய் | 2. கைக்குத்தல் அரிசி | 2. சாமை |
| 3. உளுந்து | 3. கருப்பு கவுனி அரிசி | 3. வரகு |
| 4. நாட்டு சர்க்கரை | 4. பூங்கார் அரிசி | 4. கம்பு |
| 5. ஏற்காடு தேன் | | 5. கேழ்வரகு |
| 6. மண்புழு உரம் | | |

நிறுவனப் பெயர்:
**வளர்வளம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்**
மாவட்டம்: **சேலம்**
வட்டாரம்: **ஓமலூர்**
ஊராட்சி: **கொட்டாங்கவுண்டம்பட்டி**

**இவர்களது உற்பத்திப் பொருட்களை வாங்க தொடர்புகொள்ளவும்**
**8428453366**

## வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு
(044) 434 43200 | tnrtpstate@gmail.com | www.tnrtp.org
VaazhndhuKaattuvom | VaazhndhuKaattuvom | tn_rtp